**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் தேதி திங்கட்கிழமை**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.343/2023</u>**

(CNR No. – TNPB02-006973-2023)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மருவத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்.993/2020 ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

1. சகுந்தலா, வயது 42/2020
   க/பெ.கிருஷ்ணமூர்த்தி,
2. உதயகுமார், வயது 22/2020
   த/பெ. கிருஷ்ணமூர்த்தி,
3. சாரதி, வயது 19/2020,
   த/பெ. கிருஷ்ணமூர்த்தி,

**<u>எதிரிகளின் முகவரி.</u>**
எண். 274, கிழக்கு தெரு,
பீல்வாடி கிராமம்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரிகள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம்</td><td colspan="2">(எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை.)</td></tr>
<tr><td>காவலில் வைக்கப்பட்ட தேதி</td><td>விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி</td></tr>
<tr><td>A1, A2, A3</td><td>08.09.2020(SB)</td></tr>
<tr><td>2.</td><td>நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி</td><td colspan="2">11.07.2023</td></tr>
<tr><td>3.</td><td>அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி</td><td colspan="2">இல்லை</td></tr>
</table>

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:20:35 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on நாள் : 08.11.2023 | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | - | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4<br>அ.சா.5<br>அ.சா.6 | 27.11.2025<br>27.11.2025<br>27.11.2025<br>28.01.2026<br>03.06.2026<br>09.06.2026 | 27.11.2025<br>27.11.2025<br>27.11.2025<br>28.01.2026<br>03.06.2026<br>09.06.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 12.06.2026 | | |
| 8. | எதிரி தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரி ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 05.08.2023 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 22.06.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.கந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. இவ்வழக்கின் புகார்தாரர் செங்கம்மாள் 01.09.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் காட்டிற்கு விவசாய வேலை செய்ய போகும்போது 1, 2, 3 எதிரிகள்

புகார்தாரரை தேவிடியா கண்டார ஓழி என்று திட்டி, 1 ஆம் எதிரி சகுந்தலா புகார்தாரரை கையால் மூக்கில் அடித்து, காலால் எட்டி உதைத்துள்ளதாகவும் 2 ஆம் எதிரி உதயகுமாரும் 3 ஆம் எதிரி சாரதி இருவரும் கல்லால் புகார்தாரர் செங்கமாலை அடித்துள்ளதாகவும் எனவே, 1 ஆம் எதிரியின் மீது இ.த.ச. 294(b), 323 ஆகிய பிரிவுகளின் கீழும், 2, 3 எதிரிகளின் மீது இ.த.ச 294(b), 336 மற்றும் Sec 4 of TNPHW act ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மருவத்தூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>**

3. 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1, 2, 3 எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1 முதல் 3 வரையான எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>**

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-</u>**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 செங்கம்மாள் தனது சாட்சியத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய்கிழமை அன்று எனது காட்டில் சோளத்திற்கு உரம் போட்டுக் கொண்டிருந்தேன் என்றும் எதிரி சகுந்தலா பின்பக்கமாக வந்து தனது தலைமுடியைப் பிடித்து இழுத்தார் என்றும் எதிரி உதயகுமார் தேவிடியா என்று அசிங்கமாக பேசினார் என்றும் எதிரி சாரதி தன் மூக்கில் குத்தியதும் இரத்தம் கொட்டியது என்றும் தன்னால் அடி தாங்க முடியவில்லை என்றும் தான் தன்னை



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:20:47 +0530

அடிக்காத என்று கும்பிட்டேன் என்றும் சம்பவயிடத்தில் தன் மோதிரம் உருவி கீழே விழுந்துவிட்டது என்றும் காயம்பட்ட நான் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றும் காவல்துறையினர் தன்னை மருத்துவமனைக்கு செல்லும்படி அறிவுறுத்தினார்கள் என்றும் பின்னர் தான் தனது மகள் வேம்புவுடன் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன் அங்கு நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருக்கும்போது போலிசார் வந்து சம்பவம் குறித்து தன்னிடம் விசாரணை செய்தார்கள் என்றும் தான் அவர்களிடம் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் அளித்தது தான் என்றும் அதில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 உமாதேவி தனது சாட்சியத்தில் அ.சா.1 செங்கம்மாள் தனது தாயார் என்றும் ஆஜர் எதிரிகள் தனது சித்தி, சித்தப்பா. ஆஜர் இல்லாத எதிரி சாரதி தனது தம்பி என்றும் தான் தனது அம்மாவை காட்டில் விட்டுட்டு உரம் எடுப்பதற்காக வீட்டிற்கு போய்விட்டு வந்து கொண்டிருக்கும்போது யாரோ சண்டை என்று பேசிக்கொண்டு சென்றார்கள் என்றும் அந்த சண்டை தனது அம்மாவிற்கும், சித்தி சித்தப்பாவிற்கும் என்று அப்போது தனக்கு தெரியாது என்றும் தானும், தனது தங்கை வேம்புவும் காட்டிற்கு சென்று பார்த்தபோது தனது அம்மா கரைக்கு அந்தப்புறம் எதிரிகளின் காட்டில் கிடந்தார் என்றும் யார் அடித்தார்கள் என்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்றும் தன் அம்மா மீது தண்ணீர் தெளித்து எழுப்பி கேட்ட போது எதிரிகள் தாக்கியதாக தனது அம்மா சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும் சம்பவயிடத்தில் எதிரிகள் யாரும் இல்லை என்றும் தனது அம்மாவின் மூக்கில் இரத்தம் வந்தது என்றும் கை கால்களில் காயம் இருந்தது என்றும் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றும் இரு சக்கர வாகனத்தில் தனது தங்கை வேம்பு தனது அம்மாவை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார் என்றும் பின்னர் காவல் துறையினரின் அறிவுரையின்படி தனது அம்மாவை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பேருந்தில் அழைத்துச் சென்றார் என்றும் போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.3 வேம்பு தனது சாட்சியத்தில் அ.சா.1 செங்கம்மாள் தனது தாயார் என்றும் அ.சா.2 உமாதேவி தனது அக்கா என்றும் ஆஜர் எதிரிகள் தனது சித்தி, சித்தப்பா. ஆஜர் இல்லாத எதிரி சாரதி



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:20:52 +0530

தனது தம்பி என்றும் கடந்த 01.09.2020 அன்று தான் தனது அம்மாவை காட்டில் விட்டுட்டு உரம் எடுப்பதற்காக வீட்டிற்கு போய்விட்டு வந்து கொண்டிருக்கும்போது யாரோ இரண்டு பேர் பைக்கில் ஒரு அம்மாவை 3 பேர்கள் அடித்து போட்டு கீழே கிடக்கிறார்கள் என்று பேசிக்கொண்டே போனதை தாங்கள் கேட்டோம் என்றும் தனது அம்மா என்று தங்களுக்கு அப்போ தெரியாது என்றும் தாங்கள் காட்டிற்கு சென்று பார்க்கும்போது எதிரிகள் யாரும் அங்கில்லை என்றும் தனது அம்மா எதிரிகளின் காட்டில் கிடந்தார் என்றும் தனது அம்மாவை தூக்கி பார்க்கும்போது சம்பவயிடத்திலேயே மலம் மற்றும் சிறுநீர் கழித்திருந்தார் என்றும் தாங்கள் தண்ணீர் தெளித்து தங்கள் அம்மாவை தூக்கிவிட்டோம் என்றும் தனது அம்மா எதிரிகளின் பெயர்களை கூறி அவர்கள் அடித்து விட்டார்கள் என்ற விவரத்தை சொன்னார் என்றும் எதிரி சகுந்தலா என்பவர் தனது அம்மாவின் தலைமுடியை பிடித்து அடித்தார் என்றும், எதிரி உதயகுமார் சாவடி சாவடி என்று நெஞ்சிலே மிதித்தார் என்றும், எதிரி சாரதி என்பவர் இரண்டு கால்களிலும் ஏறி நின்றார் என்றும் எனது அம்மா எங்களிடம் சொன்னார் என்றும் சம்பவயிடத்திலிருந்து தானும் தனது அக்காவும் தனது அம்மாவை பைக்கில் ஏற்றி வீட்டிற்கு அழைத்து வந்து பாவாடை மட்டும் மாற்றினோம் புடவையையும், ஜாக்கெட்டையும் மாற்றவில்லை என்றும் பின்னர் தானும் தனது அம்மாவும் மருவத்தூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம் அவர்கள் மருத்துவமனைக்கு செல்லும்படி அறிவுறுத்தினார்கள் அதன்படி பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு தனது இரு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றேன் என்றும் அங்கு உள்நோயாளியாக தனது அம்மா 9 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றும் போலிசார் சம்பவத்தன்று மருத்துவமனைக்கு வந்தார்கள் மறுநாள் வந்து விசாரணை செய்ததில் தான் தனது அம்மா சொல்லச் சொல்ல புகாரை எழுதினேன் என்றும் அதில் போலிசார் தன் அம்மா கையொப்பம் பெற்று சென்றார்கள் என்றும் போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 ரவி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் ஆனால் அதுபோன்று உள்ளது என்றும் கடந்த 4–5 ஆண்டுகளுக்கு முன்பு வெற்றுத்தாளில் பீல்வாடி அருகே உள்ள டீக்கடையில் தான் இருந்தபோது போலிசார் தன்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும் தானும் ராஜாங்கம் என்பவரும் அங்கிருந்து கையொப்பம் செய்தோம் என்றும் எதற்காக வெள்ளைத்தாளில்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:20:58 +0530

வாங்கினார்கள் என்றோ, எந்த வழக்கிற்காக வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் ராஜாங்கம் என்பவர் கடந்த ஓராண்டிற்கு முன்பு வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார் என்றும் அந்த இறப்பு நிகழ்வில் தான் கலந்து கொண்டேன் என்றும் கையெழுத்து வாங்கிய தேதி, நேரம், மாதம் தனக்கு நினைவில்லை என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சி ஆகிவிட்டார்.

9. மருத்துவரான அ.சா.5 ரமேஷ் தனது சாட்சியத்தில் தான் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணியிலிருந்த போது கடந்த 01.09.2020ம் தேதி மதியம் 03.40 மணியளவில் செங்கம்மாள் க.பெ சீனிவாசன் (வயது 45) என்பவர் சிகிச்சைக்காக வந்தார் என்றும் அவரை விசாரணை செய்த போது தனக்கு தெரிந்த மூன்று நபர்கள் கல் மற்றும கையால் தாக்கியதாக கூறினார் என்றும் தான் அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும் மேல் உதட்டில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது என்றும் இடது பக்க கன்னத்தில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது என்றும் இடது மணிக்கட்டில் ஒரு கடித்த காயம் இருந்தது என்றும் மார்பில் சிராய்ப்பு காயம் ஒன்று இருந்தது என்றும் வலது கால் பகுதியில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது என்றும் வலது Occipital (பின்தலையில்) வீங்கிய காயம் இருந்தது என்றும் மேற்கண்ட காயங்களை தான் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன் என்றும் காயம் பட்ட நபரை தான் வெளி நோயாளியாக அனுமதித்து சிசிக்சை அளித்து அ.சா.ஆ.2 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.3 காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ராஜேந்திரன், காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 01.09.2020ம் தேதி மருவத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிநத் போது பீல்வாடி கிராமத்தை சேர்ந்த சீனிவாசன் மனைவி செங்கம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று மருவத்தூர் காவல் நிலைய மனு எண் 312/2020 விசாரணைக்கு பின்னர் 04.06.2020ம் தேதி மருவத்தூர் காவல் நிலைய குற்ற எண் 993/2020 ன் படி சட்டப்பிரிவுகள் 294(b), 323, 336, 379 of IPC & 4 of TNPHW Act ன்படி வழக்கு அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சாட்சிகள்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:03 +0530

ராஜாங்கம் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும் சாட்சிகள் செங்கம்மாள், உமாதேவி, வேம்பு, ரவி, ராஜாங்கம் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் தனது விசாரைணயில் வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் கடந்த 08.09.2020ம் தேதி மாலை 16.00 மணிக்கு பீல்வாடி பேருந்து நிறுத்தம் அருகே இருந்த 3 எதிரிகளையும் கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்த அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து தக்க காவல் நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும் காயம்பட்ட செங்கம்மாளுக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றை பெற்றேன் என்றும் புகாரில் வாதி சொல்லியது போல் மோதிரத்தை எதிரிகள் திருடவில்லை என எனது விசாரணையில் தெரிய வந்ததால் இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 336, 379 of IPC & 4 of TNPHW Act விலிருந்து 294(b), 323, 336 of IPC & 4 of TNPHW Act ன் படி அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் இறுதியாக தன்னுடைய விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 294(b), 323, 336 of IPC & 4 of TNPHW Act ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்**

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2, 3 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1, 2, 3 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2, 3 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு வாதம்**

12. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:09 +0530

**<u>எதிரிகள் தரப்பு வாதம்</u>**

13. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வை மகஜர் சாட்சி என அ.சா.1 , அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகிய சாட்சிகளும், மருத்துவர் சாட்சியான அ.சா.5 சாட்சியும் 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2, 3 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

14. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரர் செங்கம்மாள் 01.09.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் காட்டிற்கு விவசாய வேலை செய்ய போகும்போது 1, 2, 3 எதிரிகள் புகார்தாரரை தேவிடியா கண்டார ஓழி என்று திட்டி, 1 ஆம் எதிரி சகுந்தலா புகார்தாரரை கையால் மூக்கில் அடித்து, காலால் எட்டி உதைத்துள்ளதாகவும் 2 ஆம் எதிரி உதயகுமாரும் 3 ஆம் எதிரி சாரதி இருவரும் கல்லால் புகார்தாரர் செங்கமாலை அடித்துள்ளதாகவும் அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

16. எதிரிகள் தரப்பில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2, 3 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

17. 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 294(b)** ன் கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **"ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசப்பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற செயல் செய்திருக்க வேண்டும்"** என்ற நிலையில், 1, 2, 3



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:15 +0530

எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டு குறித்து ஆராய்கையில், புகார்தாரரான அ.சா.1 செங்கம்மாள் தனது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி உதயகுமார் தேவிடியா என்று அசிங்கமாக பேசினார் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 தான் அளித்த அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள் தன்னை ஆபாசமாக பேசியதாக குறிப்பிடபடவில்லை. இருப்பினும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் எதிரிகள் அ.சா.1 ஐ திட்டியதால் மற்றவர்களுக்கு தொந்தரவாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருந்தது என்று எந்தவொரு சாட்சியும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு–294(b)ன்– கீழான குற்றச்சாட்டை மேற்படி சாட்சிகளின் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 323**–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்றால் **"ஒருவர் மற்றொருவருக்கு தன்னிச்சையாக சொற்பக்காயம் விளைவித்திருக்க வேண்டும்"** என்ற நிலையிலும், 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 324 ன்** கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **"இதச 334 வது பிரிவில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தவிர, சுடுவதற்கு, குத்துவதற்கு அல்லது வெட்டுவதற்கான கருவி எதன் மூலமேனும், அல்லது எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அந்தக் கருவி எதன் மூலமேனும், அல்லது நெருப்பு அல்லது சுடுபொருள் எதன் மூலமேனும் நஞ்சு, அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள் எதன் மூலமேனும், அல்லது வெடிக்கும் பொருள் எதன் அல்லது மூச்சிழுத்தால், விழுங்கினால் அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும், அல்லது விலங்கு எதன் மூலமேனும், தன்னிச்சையாகக் காயம் விளைவித்திருக்க வேண்டும் "** என்ற நிலையிலும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள மேற்கண்ட குற்றச்சாட்டுகளை ஆராய்கையில், அ.சா.1 அளித்த அ.சா.ஆ.1 புகாரில், 01.09.2020 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் எதிரிகள் மூவரும் புகார்தாரர் செங்கம்மாளை மிக கடுமையாக தாக்கி கல்லால் அடித்து நெஞ்சில் எட்டி உதைத்து மூக்கில் அடித்து விரலில் இருந்த 4 கிராம் மோதிரத்தை உறுவிக்கொண்டு சென்றார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ.1 புகாருக்கு முரண்பட்டு அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு



RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:20 +0530

முன்பு எதிரி சகுந்தலா பின்பக்கமாக வந்து தனது தலைமுடியைப் பிடித்து இழுத்தார் என்றும் எதிரி சாரதி தன் மூக்கில் குத்தியதும் இரத்தம் கொட்டியது என்றும் சம்பவயிடத்தில் தன் மோதிரம் உருவி கீழே விழுந்துவிட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியுமான அ.சா.1 ன் மகளுமான அ.சா.2 உமாதேவி தனது சாட்சியத்தில் தனது அம்மாவை யார் அடித்தார்கள் என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் எதிரிகள் தாக்கியதாக தனது அம்மா சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளதும், அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்த தேதியை குறிப்பிட்டு சொல்லாததும், எதிரிகள் அ.சா.1 ஐ கல்லால் அடித்ததாக சாட்சியம் எதுவும் அளிக்காததும் அரசு தரப்பு வழக்கினை சந்கேதத்திற்குரியதாக்குகிறது.

19. அ.சா.1 செங்கம்மாள் தனது குறுக்கு விசாரணையில்,

**" புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது மகள் வேம்பு. நான் காவல் நிலையத்திற்கு சென்றதற்கு குறிப்பு ஏதேனும் போலிசாரால் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது"**

என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.1 ற்கு முரண்பட்டு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 உமாதேவி தனது குறுக்கு விசாரணையில்,

**"வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது புகாரை வாங்காமல் மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள் என்றால் சரிதான். அதற்கான குறிப்பு ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனையில் புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது அம்மா சொல்லசொல்ல இன்ஸ்பெக்டர் எழுதிக்கொண்டார்"** என்று சாட்சியமளித்துள்ளார்.

20. அ.சா.1 செங்கம்மாள் மற்றும் அ.சா.2 உமாதேவி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ற்கு மூக்கில் இரத்தம் கொட்டியதாக சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.1 செங்கம்மாளுக்கு சிகிச்சையளித்த அ.சா.5 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 ன் மூக்கில் இரத்தம் இருந்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில்,

**"மூக்கில் வடிந்த இரத்தம் எனது அம்மா அடிபட்டு கிடந்த இடத்தில் இருந்ததா என்றால் இருந்தது. இரத்தம் சிந்திய இடத்தில் போலிசார் வந்து பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள்"**

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:25 +0530

என்று சாட்சியமளித்துள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ராஜேந்திரன், உதவி ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில்,

**"சம்பவயிடத்தில் நான் விசாரணை செய்யும்போது ரத்தக்கரை ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை**." என்று அ.சா.1 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளது அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியத்தினை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது. எனவே மேற்கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் மேற்படி பிரிவுகளின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

21. அரசு தரப்பில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 ரவி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் ஆனால் அதுபோன்று உள்ளது என்றும் கடந்த 4–5 ஆண்டுகளுக்கு முன்பு வெற்றுத்தாளில் பீல்வாடி அருகே உள்ள டீக்கடையில் தான் இருந்தபோது போலிசார் தன்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும் தானும் ராஜாங்கம் என்பவரும் அங்கிருந்து கையொப்பம் செய்தோம் என்றும் எதற்காக வெள்ளைத்தாளில் வாங்கினார்கள் என்றோ, எந்த வழக்கிற்காக வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் ராஜாங்கம் என்பவர் கடந்த ஓராண்டிற்கு முன்பு வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார் என்றும் அந்த இறப்பு நிகழ்வில் தான் கலந்து கொண்டேன் என்றும் கையெழுத்து வாங்கிய தேதி, நேரம், மாதம் தனக்கு நினைவில்லை என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளதும் அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் மேற்படி சாட்சியின் சாட்சியத்தில் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை உண்டாக்குகிறது. இதிலிருந்து புலனாய்வு அதிகாரியான அ.சா.6 உதவி ஆய்வாளர் 04.09.2020ம் தேதி சம்பவ இடம் சென்றார் என்பதும், அங்கு வைத்து அ.சா.ஆ.5–பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6–மாதிரி வரைபடத்தை தயாரித்தார் என்பதும் சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது.

22. மேலும் அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி சம்பவம் குறித்து நேரடியான சாட்சி இல்லை என்பதும், அ.சா.6 தனது புலன் விசாரணையில் தெரிந்துக்கொண்ட சங்கதிகள் தான் புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் சாட்சியம் அளித்துள்ளார்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:31 +0530

என்பதும் தெரியவரும் நிலையில் மேற்படி அ.சா.6–ன் சாட்சியத்தை கொண்டு அரசு தரப்பு வழக்கை நிரூபித்து விட்டதாக கருத முடியாது. இந்நிலையில் அ.சா.6–ன் மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.7 வரையான ஆவணங்களின் நம்பகத்தன்மையை இதர சாட்சிகள் மூலம் அரசு தரப்பில் உறுதிப்படுத்தாத நிலையில் மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதியும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6–ன் சாட்சியத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

23. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24. முடிவில், 1, 2, 3 எதிரிகள் மீதான இ.த.ச. 294(b), 323, 324 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2, 3 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2, 3 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 22.06.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:36 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**<u>I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–</u>**

1. அ.சா.1 – செங்கம்மாள்
2. அ.சா.2 – உமாதேவி

3. அ.சா.3 – வேம்பு
4. அ.சா.4 – ரவி
5. அ.சா.5 – மருத்துவர், ரமேஷ்
6. அ.சா.6 – உதவி ஆய்வாளர், ராஜேந்திரன்

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ.1 – புகார்
2. அ.சா.ஆ.2 – விபத்துபதிவேடு
3. அ.சா.ஆ.3 – காயச்சான்றிதழ்
4. அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ.5 – பார்வைமகஜர்
6. அ.சா.ஆ.6 – மாதிரிவரைபடம்
7. அ.சா.ஆ.7 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :–** இல்லை

**IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–** இல்லை

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.06.22 17:21:42 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

குறிப்பு
1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Maruvathur Cr.No.993/2020 U/S. 294(b), 323, 324 IPC | Name | A1 - Sagunthala | Occurrence | 01.09.2020 | Witness summons not served. Witness are not Produced on time by Prosecution side from 08.11.2023 to 26.05.2026 |
| | | Husband's Name | Krishnamoorthy | Complaint | 04.09.2020 | |
| | | Occupation | Labourer | Apprehension | 08.09.2020 | |
| | | Residence | No. 274, East street, Peelvadi village, Kunnam Taluk, Perambalur (DT) | Release on bail | 08.09.2020 (SB) | |
| | | Age | 42/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 27.11.2025 | |
| | | | | Closure of Trial | 09.06.2026 | |
| | | | | Sentence or Order | 22.06.2026 | |
| 2. | Maruvathur Cr.No.993/2020 U/S. 294(b), 323, 324 IPC | Name | A2 - Udhayakumar | Occurrence | 01.09.2020 | |
| | | Father's Name | Krishnamoorthy | Complaint | 04.09.2020 | |
| | | Occupation | Labourer | Apprehension | 08.09.2020 | |
| | | Residence | No. 274, East street, Peelvadi village, Kunnam Taluk, Perambalur (DT) | Release on bail | 08.09.2020 (SB) | |
| | | Age | 22/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 27.11.2025 | |
| | | | | Closure of Trial | 09.06.2026 | |
| | | | | Sentence or Order | 22.06.2026 | |
| 1. | Maruvathur Cr.No.993/2020 U/S. 294(b), 323, 324 IPC | Name | A3 - Sarathi | Occurrence | 01.09.2020 | |
| | | Father's Name | Krishnamoorthy | Complaint | 04.09.2020 | |
| | | Occupation | Labourer | Apprehension | 08.09.2020 | |
| | | Residence | No. 274, East street, Peelvadi village, Kunnam Taluk, Perambalur (DT) | Release on bail | 08.09.2020 (SB) | |
| | | Age | 19/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 27.11.2025 | |
| | | | | Closure of Trial | 09.06.2026 | |
| | | | | Sentence or Order | 22.06.2026 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.06.22 17:21:49 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 130 OF 2016

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Sengammal |
| Accused | 1.Sagunthala W/o.Krishnamoorthy<br>2.Udhayakumar S/o.Krishnamoorthy<br>3. Sarathi, S/o. Krishnamoorthy |
| Offence | U/S.294(b), 323, 324 IPC |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Sagunthala | Krishnamoorthy | Female | Labourer | Peelvadi | 42/2020 |
| 2. | Udhayakumar | Krishnamoorthy | Male | Labourer | Peelvadi | 22/2020 |
| 3. | Sarathi | Krishnamoorthy | Male | Labourer | Peelvadi | 19/2020 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commenceme nt of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 01.09.2020 | 04.09.2020 | 08.09.2020 | 08.09.2020(SB) | 27.11.2025 | 09.06.2026 | 22.06.2026 | Witness summons not served. Witness are not Produced on time by Prosecution side from 08.11.2023 to 26.05.2026 |
| 01.09.2020 | 04.09.2020 | 08.09.2020 | 08.09.2020(SB) | 27.11.2025 | 09.06.2026 | 22.06.2026 | |
| 01.09.2020 | 04.09.2020 | 08.09.2020 | 08.09.2020(SB) | 27.11.2025 | 09.06.2026 | 22.06.2026 | |

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.22 17:21:54 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.